## மாநகரில் சட்டவிரோத வணிகர்கள்

# உரிய அனுமதி பெற ஆகஸ்ட் வரை அவகாசம்



கோலாலம்பூர், ஏப். 21-

தலைநகரில் சட்டவிரோதமாக வியாபாரம் செய்கின்றவர்கள் ஆகஸ்ட் மாதத்திற்குள் முறையாக லைசென்ஸ் பெற அவகாசம் வழங்கப்படுவதாக கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோ ஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா தெரிவித்தார்.

எந்த ஓர் அனுமதியும் இன்றி வியாபாரம் செய்கின்ற வணிகர்கள் உடனடியாக வந்து தங்களை பதிந்து கொண்டு தங்கள் வாணிபத்திற்கான உரிமத்தை பெற வேண்டும் என்றார் அவர்.

எனினும் அதே நேரத்தில் இந்த வணிகர்களை முழுமையாக ஆராயுமாறும் கோலாலம்பூர் மாநகர மன்றம் கேட்டுக் கொண்டது. இந்த அணுகு முறை அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒரு மன்னிப்பு அல்ல. மாறாக அவர்களுடைய நிலைமையை மாற்றி அமைக்கவும் சட்டப்பூர்வ வழியில் அவர்கள் செயல்படவும் வழங்கப்படும் வாய்ப்பு என்றார் அவர். வழங்கப்பட்ட இந்த அவகாசத்திற்குள் முறையான அனுமதியை பெறத் தவறினால் இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

எப்போதுமே இது போன்ற விவகாரங்களில் நியாயத்தை அனுசரிக்க அரசாங்கம் விரும்புகிறது. சட்டத்தை எல்லோரும் மதித்து நடக்க வேண்டும். மாநகரில் எந்த ஒரு வணிக நடவடிக்கையாக இருந்தாலும் மாநகர மன்றத்தின் விதிமுறைகளை குறிப்பாக அதற்கான உரிமத்தை பெற்று நடத்தப்பட வேண்டும்.

இதை மீறி நடப்பது குற்றம். இதில் சமரசத்திற்கு இடமில்லை. அதே நேரத்தில் சிலவற்றை நாம் பரிசீலிக்க வேண்டிய அம்சமும் இருக்கிறது. மாநகர மேயர் லைசென்ஸ் தொடர்பான எல்லா விதிமுறைகளையும் பரிசீலிக்க நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

எந்த ஓர் அமலாக்க நடவடிக்கையும் நியாயமாக பாகுபாடு இல்லாமல் நடத்தப்பட வேண்டும். சட்டத்தை மீறுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அது மலாய்க்காரர்களோ, சீனர்களோ, இந்தியர்களோ யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிரந்தர விதிமுறைகளை பின்பற்றி இந்த நடவடிக்கை அமைய வேண்டும் என்றார் அவர்.